751

757/177.

பதிவு எண் — வெள்ளிக் கிழமையில் குருகுலக் கிளர்ச...

முல்லைக்கொடி

தமிழ்க் கிழமை வெளியீடு :- இது, சான்றாண்மை ...

ஆசிரியர் : இளவழகனார்.

OFFICE OF THE REGISTRAR

MAR 51

கிளை—ரு. | குருகுலம், மாம்பாக்கம்; விக்ருதி, மாசி; 16—2—51. | தளிர்—கவ

"குணநலம் சான்றோர் நலனே; பிறநலம் எந்நலத் துள்ளதூஉ மன்று."

"கடனென்ப நல்லவை யெல்லாம்; கடனறிந்து சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."

எண்ணிப் பாருங்கள்!

1. குடியாட்சி பெற்றுள்ள மக்கள், தம் நாட்டு மொழி, கலை, பொருள், நாகரிகங்களுக்கே முதன்மை தரவேண்டும்; மேலுமேலும் நலமுள்ள வகையில் மேன்மையாக்கிக் கொள்ளவும் வேண்டும்.

2. பிற நாட்டு மொழி கலை பொருள் நாகரிகங்களின்மேல் உண்டாகும் வேட்கைகளை —அவை, தம் கீழ் நிலைக்குச் சான்றாயிருத்தலின்—படிப்படியாய்க் குறைத்துக்கொள்ள வேண்டும்.

3. பிற நாட்டு மொழி முதலியவற்றில் நலமுள்ள பகுதிகளைப் பயன்கொள்ளுதல் நன்றேயாயினும், நம் நாட்டு மொழி முதலியவற்றிற்கு இடையூறு இல்லாதவகையிலும், ஆக்கந் தரும் வகையிலும் பயன்படுவதாயிருந்தால் மட்டுமே—அதுவும் தேவைக்குமேல் மிகுதும் மேல் விழாதவகையில்—அளவுடன் கையாளலாமல்லது, கண்ணை மூடிக்கொண்டு மேற்கொள்ளலாகாது.

4. பல வகையான விளம்பரங்கள், தெருப் பெயர் ஊர்ப்பெயர் மக்கள் பெயர்கள், கடிதங்கள் கட்டுரைகள் கணக்குகள், அழைப்பிதழ்கள் அறிவிப்புகள், பாட நூல்கள் அறிவு நூல்கள், நாள் கிழமை திங்கள் இதழ்கள், வாய்மொழிகள் முதலியவற்றிலெல்லாம், இம்முறையிற் கருத்தாயிருப்பது ஆட்சியுரிமை பெற்ற மக்களுக்குப் பெருங் கடமையாகும். ஏனென்றால், இவையெல்லாம் மக்களின் நினைவு சொல் செய்கைகளைப் படிப்படியாய் மாற்றி வருங் கருவிகள்!

5. எழுத்துப் பிழை கருத்துப் பிழை இல்லாமலும், கொள்கைப் பிழை உரிமைப் பிழை உண்டாகாமலும், அழகின்மை அறிவின்மை அன்பின்மை அருளின்மை நேராமலும் இவற்றிலெல்லாம், கருத்துடன் செயல் புரிந்து வாழப் பழகிக்கொள்ளவேண்டும். தக்கோர் இணக்கமே இதற்கு மருந்து.

—ஆடலரசு.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 4. தனித் தாள்—அண...

ஸலாம் என்றால் சாந்தி, அமைதி; அதிலிருந்தே இஸ்லாம் என்ற மொழி வந்தது. ஆண்டவனான அல்லாவை அமைதியாகச் சரண்புகு; அவன் ஆணையை அமைதியாகச் செய்; அவன் மயமான ஆருயிர்களை அமைதியாக நேசித்து அன்புசெய்—இதுதான் இஸ்லாமின் ஸாரம். இதைக் குறிக்கவே இஸ்லாமியர் ஸலாம் வைப்பது வழக்கம். இஸ்லாமில் கொடுமைக்கும் குரூரத்திற்கும் இடமில்லை. குரான் சூராக்களெல்லாம் அருட்பெருஞ் சோதி ஆண்டவனைத் துதிக்கின்றன.

பிஸ்மில்லாஹிர்—றஹ்மான்
—இற்றஹீம்
அல்—ஹம்து லில்லாஹி ரப்பில்
—ஆலமீன்
அற்—றஹ்மான்—இற்—றஹீம்
இய்யாக நஅபுது வ இய்யாக
நஸ்தயீன்.

"அருட்பெருமானே, போற்றி போற்றி! உலகங்களைப் படைத்தாளும் ஒருவா போற்றி! கருணை வள்ளலே, கடவுளே போற்றி! உன்னையே பணிவோம்! உனக்கே வேண்டுவோம்! உனக்கு ஆளாவோம். இறைவா எங்களை சேரிய நன்னெறிகாட்டி நடத்து ...ஹே அல்லா, நீரே பெரிய [illegible]மி, மகா தேவன், தனிப்பெருங்கடவுள், அருட்பெருஞ்சோதி. உன் பெருமை உலகில் விளங்குக!"

இதுதான் இஸ்லாமியர் செய்யும் நமாஸ் என்னும் நமஸ்காரத்தின் கருத்து. திருக்குரான் முழுதும் முஸ்தபா முஹம்மது ஸல்லத்தின் அனுபவமான அருள் வாக்குகளே. முஸ்தபா ஸல்லம் ஆண்டவனிடம் ஒருமை பூண்டவர். தம்மை அப்துல்லா, ஆண்டவன் அடிமை, என்பவர். ஆருயிர்களுக்கு அன்புப்பணி செய்து, 'அல் அமீன்' பட்டம் பெற்ற வள்ளல். அகதிகளுக்கெல்லாம் அவர் தந்தை போல் உதவினார். கொடும் பகைவர் அவரைத் தனிமையில் சூழ்ந்து கொண்டு கொலைவாளைச் சுழற்றிய போதும், "நான் தனியில்லை; அல்லா இருக்கிறான், அவன் எல்லாம் வல்லவன்; அடியாரைக் காப்பான்" என்று

இஸ்லாமிய — — தத்துவம்

[சுத்தானந்த பாரதியார்]

நம்பினார். இந்த நம்பிக்கைதான் இஸ்லாமின் ஈமான். தீனுல் இஸ்லாம், ஆண்டவன் அருளில் வேரூன்றி, ஆருயிர் அன்பாகக் கிளைத்து, ஒற்றுமையாக மலர்ந்து, அமைதியின்பமாகக் கனிகிறது. ரசூல் ஸல்லம் மகாத்மா காந்திபோலவே தியாகப் பொறுமையால் குரேஷியப்பகைவரை வென்று, இஸ்லாம் குடியரசை நாட்டினார். பதினாயிரக்கணக்கான ஈமான்தார்களுக்கு அரபாத்து மைதானத்தில் உபதேசம் அளித்தபோது அவர் சொன்ன மொழிகளை ஒவ்வொருவரும் பயிலவேண்டும்:

ஒற்றுமையை உயிர்போலக்
காக்க வேண்டும்
உடன்பிறந்தார் போற்பிறரை
உள்ள வேண்டும்
மற்றவரைத் திருடாது
வாழ வேண்டும்
மாதர்களின் கற்பினைநீர்
மதிக்க வேண்டும்.

ஒரே கடவுள், ஒரே வானம், ஒரே உலகம், ஒரே உயிர்க்குலம், ஒன்றே மனித சமுதாயம் என்ற ஒருமையை நாட்டியது இஸ்லாம். முகம்மது ஸல்லம் மதீனத்தில் மசூதி கட்டி, தொழுகையும் தொண்டுமாக வாழ்ந்தார். தமது முயற்சியாலேயே பிழைத்தார். பேரீச்சங்கனியும் ஒட்டகப் பாலும் உண்டார். இயற்கையைக் காட்டிப் போதித்தார்.

கடலினைக் காணீர்; ஈசன்
கருணையைக் காணீர் என்பார்
சுடரினைக் காணீர்; ஈசன்
சோதியைக் காணீர் என்பார்
இடமகல் வானைக் காணீர்;
இறைவனின் விரிவைக் காணீர்
புடவியைக் காணீர்; ஈசன்
புலமையைக் காணீர் என்பார்

வான்மழை காணீர் அல்லா
வழங்கிடும் அமுதம் காணீர்
தேன்மலர் காணீர் அல்லா
திருநகை யழகைக் காணீர்.
யாரெனும் அகந்தை யின்றி,
இறைவனே பரவி எங்கும்
ஊன்உயிர்க்கு உயிராய் வாழும்
உண்மையை அறிகு வீரே!

இல்லறத்திலிருந்தே துறவறத்தை அனுட்டிக்க வழிகாட்டினார் ரசூலல்லா. நம உடல்பொருள் ஆவியெல்லாம் ஆண்டவன் உடைமை.

எல்லாம் அவனுடைமை; எல்லாம்
அவன் ஆணை;
எல்லாம் அவன் பொதுவென்றெண்.
ஆண்டவன் ஒருவன் அவனே
பரம்பொருள்.
ஆண்டவனுக்கிணை எதுவுமே இல்லை.
எல்லாம் அல்லா இச்சையென்
றுணர்மின்
உலகிற் கெல்லாம் பலபய னுகும்
அருட்பணி செய்பவன் அல்லா
பக்தனே.

இதுவே நபிமணியின் உபதேசசாரமாகும். இஸ்லாமிய உபதேசங்களில் வாழ்ந்து ஆண்டவன் அருளைப் பெற்ற மகான்கள் பலர். உமார் கையம், ஸாதி, ஹாபிஸ், ஹபிப் ஆஜ்மி, ஜலாலுடீன் ரூமி, தான்ஸேன், இக்பால் போன்ற கவிகளை உலகம் போற்றுகிறது. இவர்கள் வாக்குகள் வாழ்வை ஒட்டிய அனுபவச்சுடர்களே. இஸ்லாம் ஒரு பெரிய அருட்கலையை உலகிற்குத் தந்தது. உறுதிகொண்ட பெரிய சமுதாயத்தைத் தந்தது.

—கோட்டைக்குப்பம்
அஞ்சுமன் நுஸ்ரத்துல் இஸ்லாம்
வெள்ளிவிழா வெளியீடு.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE
MERCHANTS

AVANASHI ROAD,
COIMBATORE.

பெரிய புராணம்

பெருமை வாய்ந்த காப்பியமாய் இனிய தமிழ்ச் செய்யுளால் இயல்பு நடையில் இயங்கிச் செல்வது.

அருளில் அமர்ந்து இறைவனைத் தூய சொல்மலர்களால் துதிக்கும் அடியாரையும், அவர் சொல் மலரில் செறிந்துள்ள கருத்தழகுகளை உணர்ந்து நுகரும் அடியாரையும் பரவுவது திருத்தொண்டர் புராணம்.

அளப்பரும் பெருமை என்று கூறினால், அது, அடியார் பெருமையையே உணர்த்தும்; ஏனென்றால், அவர் பரந்த உப்புக் கடலின் அருகில் ஆழ்ந்து ஊறிவரும் தெளிநீர் ஊற்றுப் போன்றவர். கையாளுவோர் யாராயினும், தாம் மாசுபடாத பெருமிதப் பண்பு அமைந்தவர். உலகமும் சூழலும் அரசும் இயல்பாய் ஈர்ப்புண்டு ஈடுபடத் தக்க மாண்பு மிக்கவர்; எல்லாம வல்ல இறைவனும் நிறைவுடன் சூழ்ந்துகொள்ளும் அருமை பெருகியவர். அத்தகைய பெரியோர் சீர் பரவுவது நூல்.

உலகத்துக்கு ஞாயிறுபோல் பயன்படக்கூடியவர் திருத்தொண்டர். மாந்தர் அக இருளை நீக்கும் ஞானச்செஞ்சுடராவர். அவர் பெருமை நுவலும் பெரிய புராணமும் ஒரு மெய்ஞ்ஞானச் செஞ்ஞாயிறேயாம்.

பாயிரத்தால் விளங்கும் நூலின் நோக்கமும் ஆக்கமும் இவை. இனி, நூலினுட் சென்று அதன் நலன் தெளிந்து துய்த்துப் பிறவிப் பயன் பெறலாம்.

8

நூல் இரண்டு காண்டங்கள் அமைந்தது; காண்டம் என்றது இங்கே பெரும் பிரிவு. முதற்காண்டம், 'திருமலைச் சருக்கம்' முதல் 'திருநின்ற சருக்கம்' வரையில் ஐந்து சிறு பிரிவுகள் அடங்கியது. இரண்டாம் காண்டம், இவ்வாறே எட்டுச் சிறு பிரிவுகள் உடையது. மொத்தம் நூல், நாலாயிரத்துக்கு மேற்பட்ட செய்யுட்கள் அமைந்தது.

சமய குரவராகிய ஆளுடைய நம்பிகள் என்னும் சுந்தரமூர்த்தி நாயனார், திருவாரூரில் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் அங்குத் திருக்கோயில் கொண்டிருக்கும் புற்றிடங்கொண்ட பெருமானை நாளும் தொழுது வருவார். அத் திருக்கோயிலில், 'தேவாசிரியன்' என்று ஒரு மண்டபம் உண்டு. அங்கே, இறைவன் திருத்தாள் அன்றி வேறு கருதாத மெய்யடியார் திருக்கூட்டம் அமர்ந்திருப்பது வழக்கம். அதனாலேதான் அந்த ஊர் அரிய ஊர் என்னுங் கருத்தில் 'ஆரூர்' என்று பெயர் வழங்கிற்று.

நம்பியாரூரர், திருக்கூட்டத்தைக் கண்டதும், அவருள்ளத்தில் "அடியவர்க்கு அடியனாவேன்" என்னும் அன்பு எழுந்தது. எல்லாம் அறிந்த இறைவன், அடியவர் மேன்மைகளை நம்பியாரூரர் உள்ளத்தில் உணர்த்தித் "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என முதலடியும் எடுத்துத் தந்து அவரை இனிப் பாடுக எனவும் ஆணை தந்தார்.

ஆணைவழித் தம்மை மறந்து நின்ற நம்பிகள் அம் முதலடி தொடங்கித் 'தனித்தனி அடியேன்' என்று வணக்கங்கூறிப் பதினொரு திருவிருத்தங்களால் ஒரு பதிகம் இசைத்தார். அத் தமிழ் மாலைக்குத்தான் 'திருத்தொண்டத் தொகை' என்று பெயர்.

சேக்கிழார் பெரிய புராணத்துக்கு இத் திருப்பதிகமே முதல் நூலாகும். ஒவ்வொரு விருத்தத்தின் முதலடியின் முதற்குறிப்பு, ஒவ்வொரு சருக்கத்தின் பெயராய் அமைந்தது. இங்ஙனம் மூல நூல் பதினொரு சருக்கங்களாயின. ஒவ்வோர் அடியாரைப் பற்றி வரும் ஒவ்வொரு தொடரும் தனித்தனி ஒவ்வொரு புராணமாகச் சேக்கிழார் பெருமானால் விரித்துப் பாடப் பெற்றது.

திருத்தொண்டத் தொகையில் அறுபத்துமூவர் தனியடியார்களும் ஒன்பது தொகையடியார்களும் போற்றப் படுகின்றனர். ஆகவே, பதினொரு சருக்கங்களும் எழுபத்திரண்டு புராணங்களாகப் பெரிய புராணத்தில் அமைந்தன. 'திருத்தொண்டர் புராணம்' என்பது இது.

ஆயினும், திருத்தொண்டத் தொகையைத் தென்தமிழ்ப் பயனாக அருளிச்செய்த நம்பியாரூரர் புராணமும் இதனுடன் சேர்ப்பது நன்றென்னும் அன்புள்ளம் சேக்கிழார்க்கு எழுந்தது; முதல் நூல் அருளிச் செய்த ஆசிரியர் வரலாறு, நூலின் முகப்பில் கூறுதலும் மரபாம்; ஆதலால் சேக்கிழார்க்கு அது கடமையுமாயிற்று.

ஆசிரியர் அதனைத் திருத்தொண்டர் புராணத்தின் முன்னும் பின்னும் விளக்கிமுடிக்க முற்பட்டார். ஆகவே, முன்னொரு சருக்கமும் பின்னொரு சருக்கமும் சேர்க்கப் பெற்றன; மு[illegible] சருக்கம் 'திருமலைச் சருக்கம்' என[illegible]பட்டது; பின் சருக்கம் 'வெள்ளானைச் சருக்கம்' எனப்பட்டது. இ[illegible]னால் மொத்தம், நூல், பதின்மூன்று சருக்கங்களாயின.

நஞ்சன்கூடு பல்பொடி

பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை. 1

எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே.”
—புறநானூறு.

கிளை	விகிருதி, தை	தளிர்
3	16-2-51 வெள்ளி	18

“அமெரிக்காவைப் - பார்! ....”

“அமெரிக்காவைப் பார்! மேல் …களைப் பார்!” இவை போன் … நாம் தற்போது பெரிதும் …ள்விப்படுவன.

அமெரிக்காவும், மற்ற மேல் நாடுகளும், இன்று அறிவியல் துறையிலும் (விஞ்ஞானம்), நாகரிகத் துறையிலும், அடைந்துள்ள முன்னேற்றத்தைக் குறித்து, நாமும் அவைபோல் எல்லாத் துறைகளிலும் முன்னேற வேண்டுமென்ற நோக்குடன் பேசப்படுவன.

முன்னேற்ற நோக்கம் பெரிதும் வேண்டற்பாலது. ஆனால், எது உண்மையான முன்னேற்றம் தருவது? எது நம் நிலைக்கு நன்மைபுரிவது? என்பன போன்றவை எண்ணத்தக்கன.

அமெரிக்காவைப் போன்ற மேல் நாடுகள் அறிவியல் துறையிலும், அதன் பயனைப் பொருள்களின் பெருக்கம், வாணிபம் முதலியவற்றிலும் பெரிதும் முன்னேறியிருக்கின்றன. இன்றைக்கு, செல்வம் நிறைந்த நாடுகள் அவையே.

ஆனால் இந்தியாவைப் போன்ற நாடுகள் அவற்றை முழுதும் பின்பற்ற இயலுமா? எண்ணிப் பார்க்கவேண்டும். இந்தியா, மிக அண்மையில் மேல் நாடுகளைப் போல், அறிவியலின் முழுப்பயனைக் கொண்டு பொருள்களைப் பெருக்குவதாக எண்ணிக்கொள்வோம். அவைகளை எங்கே கொண்டு விற்பது? யார் வாங்குவார்கள்?

மேல்நாடுகளின் வரலாறுவேறு. இன்று நாம் எந்தெந்த நாடுகளைப் பின்பற்ற அவாவுகின்றோமோ, அந்தந்த நாடுகள் “தொழில் புரட்சி” (Industrial Revolution) செய்து அதனால் பெருக்கிய பெருவாரியான பொருள்களை, எப்படி மற்ற நாடுகளின் மேல் “வாணிபம்” என்ற பெயரால் திணித்தன என்பதை வரலாறு கூறும்.

தாங்கள் பெருக்கும் பொருள்களைத் திணிக்கவே, நாடு பிடிக்கும் போட்டியில் அவை இறங்கின. இதற்கு அறிவியலின் பயனான புதுமுறைப் போர்க்கருவிகளும் துணை நின்றன. ‘இங்கிலாந்து’, ‘அமெரிக்கா’, ‘பிரான்ஸ்’ போன்ற மேலை நாடுகள், ‘இந்தியா’, ‘பிலிபைன் தீவுகள்’, ‘கிழக்கிந்தியத் தீவுகள்’ இன்னும் இவை போன்ற வேற்று நாட்டாரை வலுவில் அடக்கி, தங்கள் பொருட் பெருக்கத்துக்குத் தேவையான மூலப் பொருள்களைக் கவர்ந்தும், பெருக்கிய பொருள்களை வலுவில் திணித்தும், செல்வம் திரட்டின.

இவற்றிற்கு, அவை கையாண்ட முறைகள் பற்பல. அடிமைப்பட்ட நாடுகளின் கைத்தொழில்களை நசுக்கின. முன்னேற்றத்தைக் காலந் தாழச் செய்தன.

இந்தியா, இவைபோன்ற முறைகளைக் கையாள இயலுமா? எண்ணினாலும், இம் முறைகள் காலங் கடந்தவை. அன்றி, பிறரை வருந்தி வந்து கொள்ளும் தாழ்த்துக்குப் பொருட் பெருக்கத்தில் முன்னேற்றம் அடையமுடியுமா?

மக்களுக்கு வாழ்வில் இன்றியமையாத தேவைகள் உண்ண உணவும், உடுக்க உடையும் என்பது ஐயத்திற்கு இடமில்லாத உண்மையாகும். மற்றத் தேவைகள் இவைகளுக்குப் பிற்பட்டன. இவற்றிலும் உணவே முன்னிற்பது.

நம் நாட்டின் இன்றைய உணவு நிலை எத்தகையது? எண்ணிப் பார்க்கவும் அச்சமாயிருக்கின்றது.

உணவின் தட்டுக்குப் பற்பல காரணங்கள் பேசப்படுகின்றன. அவற்றில் தெளிவாய்ப் புலப்படுவது, பருவ மழை யின்மை.

வான் பொய்த்தது. ஆனால், அரசியலின் கடமை?

உணவு மண்ணிலிருந்து விளைக்கப்படுவது. அத் தொழிலைச் செம்மையாகச் செய்ய, உழவன் வகையற்று ஏங்கிக்கிடக்கின்றான். அவனுக்கு ஒரு வேளை உணவும் அரிதாகிவிட்டது.

அந்தோ! மெய்வருத்தம் பாராது, குளிர், பனியாலான துன்பத்தைப் பொருட்படுத்தாது, இரவு, பகல் என்ற வேறுபாட்டைக் கருதாது உழைத்து, பிறருக்கு உணவளித்துத் தானும் உண்ண அவன் மனம் ஏங்குகின்றது!

உலகத்திலேயே, மிகப்பெரும் புனிதத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஏழை அன்பனே! உன்னை யார் எண்ணுகின்றார்கள்! எண்ண நேரமேது! கற்றவர்களுக்கும், ‘நாகரிக வாழ்வை’ முழு வெற்றியுடன் மேற்கொண்டு மனங்களிக்கின்றவர்களுக்கும் இதைவிட முக்கியமான அலுவல்கள் முன்னிற்கின்றன!

உலகிலேயே சிறந்த அறிஞரெனவும், அரசியல் நிபுணரென

குருகுலத்தில்

திரு. S. R. தியோடர் அவர்கள்

(பள்ளி வருகைக் கண்காணிப்பாளர்)

வீர உரை

எதிர்காலக் கலைச் சிற்பிகளே தலைவரே! பெரியோர்களே! உங்கள் அனைவர்க்கும் வணக்கம். அறிவிலும் ஆற்றலிலும் சிறியவனாகிய யான் இவண் என்ன சொல்வேன் என்று தெரியவில்லை.

இன்று ஒரு நன்னாள்: பொன் எழுத்துக்களால் பொறிக்கவேண்டிய கருத்தமைந்த நாள். இன்று, நாட்டு நலனுக்காகத் தம் வாழ்க்கையையே 'தியாகம்' செய்த பெரியார் பலரை நினைக்கின்றோம். இதே நாளில் நான் முற்காலக் கலைச் சிற்பிகளை நினைக்கின்றேன்; வாழ்த்துகின்றேன்.

நம் நாடு வள்ளுவன் தன்னை உலகினுக்குத் தந்த சிறப்பு வாய்ந்தது; கம்பன் தோன்றிய பேறுபெற்றது. 'தனியொருவனுக்கு உணவில்லையெனில் இங்கச் சகத்தினை அழித்திடுவோம்' என முழங்கிய பாரதியார் பிறந்ததும் நம் நாட்டிலேதான். கல்வி செழித்திட அப் பெரியோர் செய்த பணிகள் என்றும் இறவாதன.

பாரதியார்,

"ஊமையராய்ச் செவிடர்களாய்க்
குருடர்களாய் வாழ்கின்றோம்
ஒருசொற் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில்
தெருவெல்லாம் தமிழ்முழக்கம்
செழிக்கச் செய்வீர்!"

என்றும்,

'ஞான மென்பதோர்
சொல்லின் பொருளாம்
நல்ல பாரத
நாட்டிடை வந்தீர்!
ஊன மின்று
பெரிதிழைக் கின்றீர்!
ஓங்கு கல்வி
உழைப்பை மறந்தீர்!
மானம் அற்று
விலங்குகள் ஒப்ப
மண்ணில் வாழ்வதை
வாழ்வென லாமோ?

என்னும் பாடல்கள் வாயிலாக, நாட்டில் கல்வி உணர்ச்சி கனன்றெழச் செய்திருக்கிறார்:

ஆனால், தற்காலம் பிள்ளைகளின் பெற்றோர் இவைகளை எண்ணுவதில்லை.

"பிள்ளையும் படிக்கவேண்டாம்
பிரம்படி படவும் வேண்டாம்
சள்ளையாம் சுவடி தூக்கிச்
சங்கடப் படவும் வேண்டாம்
....
பிள்ளையென் றிருந்தால் போதும்"

என்று நினைத்தவர்களாய்க் கல்வியில் நாட்டம் செலுத்தா தொழிகின்றனர்.

இதோ பாருங்கள்! இக் குருகுலத்தை அமைப்பதற்கு எவ்வளவு உழைப்பெடுத்திருப்பார்கள். பிள்ளைகள் நலத்துக்கும் கல்விக்குமாக இக் குருகுலம் அமைந்திருப்பினும், பிள்ளைகளைச் சரிவர அனுப்புவதில் பெற்றோர் தகுதியான அக்கறை காட்டுதல் காணோம். குருகுல நோக்கமும் கலையார்வமும் மலைபோல இருந்தும் பெற்றோர்க்கு அவற்றின் முழு மேன்மையும் தெரியவில்லையே! இதனை என்னென்று சொல்வது!

பிற அழகுகள் வாய்ப்பினும் கண்ணில்லையாயின் பயனில்லையன்றோ? நாட்டு முன்னேற்றம் கல்வியில் இருக்கிறது. இந்நாட் சிறுவர் வருங்காலக் கலைச் சிற்பிகள் என்று பெற்றோர் நினைப்பதில்லை. அது பெருந் தவறாகும் என்று இடித்துரைக்கத்தான் 'பெற்றோர் விழா' இன்று நடைபெறுகின்றது.

நம் நாட்டில் 'நாமகள் விழா' கொண்டாடுகிறார்கள். ஆனால் இங்கேதான், படியாதவர்கள் மிகுதியாக உள்ளனர்.

"செந்த மிழ்மணி நாட்டிடை யுள்ளீர்!
சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்!
வந்த னம்மிவட் கேசெய்வ தென்றால்
வாழி யஃதிங் கெளிதன்று கண்டீர்!
மந்தி ரத்தை முணுமுணுத் தேட்டை
வரிசை யாக அடுக்கி யதன்மேல்
சந்த னத்தை மலரை யிடுவோர்
சாத்தி ரம்மிவள் பூசனை யன்றாம்"

என்று பாரதியார் கூறிய பொன்மொழிகளைக் கருதிப் பாருங்கள். கலைமகள் விழாக்களைச் செய்வதில் கருத்தூன்றும் அளவுக்குக், கல்வியை நாட்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

...வும் பெயர்கொள்ள அவாவி நிற்கின்றனர்! அவர்கள் ஏட்டுக் கல்வி, அதனால் பெற்ற பட்டப், அறிவு, அம்மம்ம! எப்படியெல்லாம் அமைதியை அலைத்து வருகின்றன!

வானத்தில் மிக உயர்ந்தும், நீரில் மிக ஆழ்ந்தும், கடுகியும் செல்லும் கருவிகளை நாளுக்கு நாள் வளர்த்துவரும் அறிவியல், மனிதரை நூற்றுக்கணக்கில், ஒரு நொடியில் பொசுக்கும் விஞ்ஞானம்—வயிற்றின் தேவையைப் பூர்த்தி செய்வதில் வன்மையற்றதா?

தீமை, மிகுதியாக வெற்றி அடைகின்றது. மிகவும் உண்மை எனப்படுவதோ, கீழ்த்தரமானதாகவும் இழிவுடையதாகவும் தோன்றுவது மிகவும் கொடுமையாக இருக்கின்றது; வேண்டுவது இன்று நல்வழிக் கட்சி; இதனால், இடர்கள் ஓயும்.

மனிதன் என்று திருந்துவான்? வஞ்சனை, வலுக்கட்டாயம், காமம் முதலிய தீக்குணங்களிலிருந்து விடுபடப் பல ஊழிகள் செல்லவேண்டுமோ? திருந்தவே முடியாத அவ்வளவு விலங்குத் தன்மை கொண்டவனா மனிதன்! அன்று; நன்னடை முயற்சியே நாளும் வேண்டும், வேண்டும்; உய்வு அதிலேதான் உள்ளது!

—பா. வரதராசனார்.

(...-ம் பக்கம் தொடர்ச்சி)

...டில் பரப்புவதற்கு உழைப்பினை மேற்கொள்வதில்லை.

ரஷ்யாவில் 100-க்கு ஐந்துபேர் கூடப் படியாதவர்கள் இல்லை. இங்கோ 100-க்கு 80 என்னும் அளவில் கல்வி யறிவில்லாத மக்களே இருக்கின்றனர். மேனாட்டில் காலத்தின் போக்கை உணர்கிறார்கள். காலத்துக்கேற்ப, தம்மைக் கல்வி யறிவுள்ளவர்களாகக் காண விழைகின்றார்கள். ஆனால் நம்மவர், 'எல்லாம் அவன் செயல்' என்றும், 'ராமன் ஆண்டாலென்ன! ராவணன் ஆண்டாலென்ன?' என்றும் பழைய வேதாந்தம் பேசியே நாட்களைக் கழிக்கிறார்கள்.

“வீடு தோறும் கலையின் விளக்கம்,
வீதி தோறும் இரண்டொரு பள்ளி,
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்க ளெங்கும் பலபல பள்ளி;
தேடு கல்வியி லாததோ ரூரைத்
தீயி னுக்கிரை யாக மடுத்தல்;
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிவை
கண்டீர்'

என்று பாரதியார் மொழிந்ததுபோல், நாடெங்கும் கல்விச்சாலைகள் தழைத்தோங்கவும், கல்வி யறிவு செழித்தோங்கவும் பாடுபடுவது நம் நாட்டவர் கடமையன்றோ!

பள்ளிகள் ஆங்காங்கு நிறுவவதோடு அமையாது, பிள்ளைகளை ஒழுங்காகப் பள்ளிக்கு அனுப்புவதில் பெற்றோர்கள் அக்கறை காட்டுதல் மிகவும் சிறந்ததாகும்.

“அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறி
வித்தல்”

என்னும் பாரதியார் சொல்லுக்கு இலக்காகவே ஆசிரியர் இளவழகனார் இப்பள்ளியை இவண் நிறுவியுள்ளார். இதற்கு எவ்வளவு பாடுபட்டிருப்பார்! இதை நிறுவியான பின், இதனைச் சிறந்த நிலையில் செழிப்பிக்கும் கடமையைப் பொதுமக்கள் மேற்கொள்ளுதலன்றோ சிறந்த செயல்!

பொன்னும் பொருளும் கொடுத்து உதவும் செழிப்புள்ளவர்கள் உதவட்டும்; மற்றவர்கள், பாரதியார் சொல்லுவதுபோல் தம் உழைப்பினை உதவியே சிறந்த தொண்டாற்றக்கூடும். பள்ளிக்குச் செல்லத்தக்க குழந்தைகளை ஒழுங்காகத் தவறாமல் பள்ளிக்கு அனுப்புவது பொது மக்களாகிய பெற்றோர்க்குச் சிறந்த கடமையாகும். பெற்றோர் தம் கடமையிற் கருத்தாயிருந்து, பிள்ளைகளை ஒழுங்காகப் பள்ளிக்கு அனுப்புவார்களாக!

இன்று இவ்வகையில் கவனக்குறைவாக இருக்கும் பெற்றோர்களை,

“துள்ளித் திரிகின்ற காலத்திலேஎன்
தடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்திலனே தந்தையாகிய
பாதகனே”

என்று, அவர்கள் சிறுவர் சிறுமியரே நாளை குறைகூறக் கூடும். பெற்றோர்களே! உங்கள் பிற்கால மக்கட்கு எவ்வகையான செல்வத்தைச் சேர்த்து வைக்கப் போகிறீர்கள், நன்றாகச் சிந்தியுங்கள். அழியும் இயல்புள்ள பொருட் செல்வத்தையா? அல்லது என்றும் அழியாத கல்விச் செல்வத்தையா?

நாட்டு விடுதலைக்காகக் காந்தியார் தம் உயிரையே சிந்தினார். வரலாற்றில் 'சிப்பாய்க் கலகம்' சேர்ந்த நிகழ்ச்சியே உரிமைப் போருக்கு அடிப்படை என்று சிலர் கருதுகிறார்கள். அது தவறு; முதன் முதல் விடுதலையுணர்ச்சியை நாட்டில் கிளப்பியது, வீரபாண்டியக் கட்டபொம்மன் என்னும் தமிழ் வேந்தன்; பாஞ்சாலங்குறிச்சியை ஆட்சி புரிந்தவன். ஆங்கிலேயர் ஆட்சியில் இவனை அடக்கியாளப் பார்த்தனர்; கப்பங் கேட்டனர்; மறுத்தான்.

“வானம் பொழியுது பூமி விளையுது, மன்னவன் காணிக்கு ஏது பணம்” என்று அவன் முழங்கி[illegible] வெள்ளையனே வெளியேறு என்று வீரவுரை புரிந்தவன் உண்மையில் அவ் வீரபண்டியனே.

அத்தகைய வீரன் இரத்தம் நம் நரம்புகளில் ஊடுருவிப் பாயவேண்டும். நம்மை நாமே ஆளும் தெளிவு பெறவேண்டும். அப்போதுதான், கல்வி ஒன்றாலேயே தற்கால அரசியலைச் சரியாக ஆள முடியும் என்று ஒவ்வொருவரும் உணரக்கூடும்.

திருவள்ளுவர், பாரதியார் இவர்கள் நம்மைவிட்டு மறைந்தாலும், அவர்கள் ஆவி நம்மிடையிலேதான் உலவுகிறது. நம்மிடையே கல்வியில் தக்க அக்கறை உண்டாகும்படி, அவர் தம் ஆவிகள் நம்மை ஊக்கப்படுத்தட்டும்!

இக் குருகுலம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளரவேண்டும்; வளர்ந்துவரும். வேறு சில பள்ளிகளில் உள்ளதுபோல் கட்டாயக் கல்விமுறை இங்கும் கொண்டு வருவது நல்லதன்று. அம்முறை பெற்றோரின் அக்கறையின்மையைப் புலப்படுத்தும். கரும்பு தின்னக் கூலி கேட்பதுபோல் படிப்பதற்குக் கட்டாயக் கல்வி முறை இங்குக் கொண்டு வருவது சிறந்ததன்று.

இங்குள்ள இளஞ் சிறுவர்களே கூடப், பிற்காலத்தில் நாட்டு முன்னேற்றத்துக்குரிய கலைச் சிற்பிகளாகத் திகழக்கூடும்; இக் குருகுலச் சிறுவர்கள், வருங்காலத்தில் 'வல்லபாய் படேல்' போன்றும், 'வீரபாண்டியன்' போன்றும் அஞ்சா நெஞ்சமும் அழியா வீரமும் உடையவராகச் செழிக்கவேண்டும். இதனை இங்குள்ள பெற்றோர் அனைவரும் கருத்தூன்றி, அதற்கான முயற்சிகளில் தளராமல் உழைக்கவேண்டும். எல்லாவற்றுக்கும் அடிப்படை பள்ளிக்குச் சிறுவர்களை ஒழுங்காக அனுப்புதலேயாம்.

நாளைக்கே இக் குருகுலம் பெரியதொரு நிலையமாக விளங்கும். இப் பள்ளி எட்டாவது வகுப்பு வரை உயர்ந்து, பொது நிலைப் பள்ளியாகிச் சிறந்த [illegible]காகத் திகழவேண்டும் என்று [illegible] நினைக்கின்றேன்.

விழும்போது கூச்சலிட்டுக் கொண்டு விழுந்ததால் தூங்கிக் கொண்டிருந்த காவலன் விழித்துக் கொண்டு அவன் நிலையை வெளியிலிருந்து பார்த்தான். உடனே தலைமைக் காவலாளியிடம் சென்று உற்றதை உரைத்தனன். அவனும் அங்கு ஓடிவந்து சிறைக்கதவைத் திறந்து பார்க்க, வாயில் இரத்தம் வழிந்தோடும் நிலையில் இறந்திருக்கும் விமலாதித்தனையும், அவன் பக்கத்தில் உருண்டிருந்த சிமிழியில் 'நஞ்சு' என்று எழுதப்பட்டிருந்ததையும் பார்த்தான். விமலாதித்தனை ஒரு பெட்டியிலிட்டு மூடி அரண்மனையில் ஒரு பகுதியில் வைத்தனன். ஐயோ பாவம்! அவன் வாழ்வு இப்படியா முடியவேண்டும் என்று காவலாளிகள் இரங்கினர்.

* *

சோழனுக்கெதிராகச் சேரனும் பாண்டியனும், தங்கள் படைகள் எல்லாவற்றையும் நடத்தி வந்தனர். அவர்கள் சேனையும் அளவில் பெரியதாகத்தான் இருந்தது. சேரனை இராஜேந்திரனும் சக்திவர்மனும் தாக்கி எளிதாக அவனைச் சிறைப்படுத்தினர்.

பாண்டியன் அமரபுஜங்கனுக்கும் இராஜ ராஜ சோழனுக்கும் போர் மும்முரமாக நடந்தது. தேர்களோடு தேர்கள், வில்லோடு வில், வாளோடு வாள், குதிரையோடு குதிரை, வீரரோடு வீரர் மோதினர். அப் பரந்த வெளியிலே வில்லின் நாண் ஒலிகளும், வாள் ஒன்றோடொன்று மோதுதலால் ஏற்பட்ட ஒலியும், குதிரைகளின் கனைப்பொலியும் கேட்டனவே தவிர மக்கள் ஒலி சிறிதும் கேட்கவில்லை.

இராஜராஜன் அமர புஜங்கனோடு சண்டை செய்கிறான். சிங்கம் சிங்கத்தோடு சண்டை செய்கிறது. வெற்றி தோல்வி எவருக்கென்று திண்ணமாகத் தெரியவில்லை.

எதிர்பாரா வகைகளில் சில நேரம் காரியங்கள் நடந்துவிடுகின்றன. இந்தச் சமயத்திலா பாவி! ஒரு பாண்டியப் போர்வீரன் தன் வாளை உருவிக்கொண்டு இராஜராஜன் பின்னால் வரவேண்டும்! இன்னும் 'பத்து' எண்ணுவதற்குள் இராஜராஜனை நெருங்கிவிடுவானே. அவனை வெட்டுவதற்கும் தன் கையை ஓங்கிவிட்டானே: இன்னும் ஒரு நொடிதான். அவன் கை கீழே விழுந்தால் இராஜராஜனுடைய தலையும் கீழே உருளும். ஆனால் நடந்தது வேறு.

பகையா? உறவா?

[அ. தி. வீரராகவன்]

அவன் ஓங்கிய கத்தி ஒன்பது அடிக்கு அப்பால் சென்று விழுந்தது. அதுவுமன்றி அவனும் இறந்தான். இராஜராஜனைக் காப்பாற்றியது சத்திவர்மன் [illegible]ன்.

அமரபுஜ[illegible]னுடைய கத்தி தூள் தூளாகச் சென்றுவிட்டது. அகப்பட்டுக்கொண்டான் அமரபுஜங்கன். சிறைப்பட்டான். வெற்றி மாலையுடன் வீட்டுக்குத் திரும்பினர் சோழ நாட்டார்.

வரும் வழியில் இராஜராஜன் சத்திவர்மனை நோக்கி, அவன் நாட்டை அவனுக்கு மறுபடி பிடித்துத் தருவதோடுமட்டு மல்லாமல், வேங்கை நாட்டிற்கு வேந்தனுக்குவதோடு மட்டுமல்லாமல், வேறு ஏதாவது தன்னிடம் ஆகவேண்டியதிருந்தால், கேட்டால் தருகிறேன் என்று கூறினான். அதற்குச் சக்திவர்மன் தன் தம்பியைக் கொலை செய்யாமல் விட்டுவிட வேண்டுமென்று கெஞ்சிக்கேட்க, வியப்பெய்திய மன்னன் அதற்கு இசைந்தனன்.

நடு இரவு! தனியாக வைக்கப்பட்டிருந்த இச் சவப்பெட்டி அசைகிறதே! ஒருவேளை பிணந்தான் உயிர் பெற்று, 'பிசாசு' உருக் கொண்டுவிட்டதோ? பெட்டியும் திறந்து கொண்டது. ஆ! யார் இது? விமலாதித்தனா? வியப்பாக இருக்கிறதே. இன்னுமா இவன் உயிரோடு இருக்கிறான். பெட்டியை முன்னிருந்தது போல் மூடிவிட்டு எங்கு அவ்வளவு பதுங்கிப் பதுங்கி வேகமாகச் செல்கிறான்.

அரண்மனையில் களவாடப்போகிறானா? அல்லது யாருடைய உயிரையாவது குடிக்கப்போகிறானா? ஒவ்வோர் அறையாகச் சென்று பார்க்கிறானே. யாரைத் தேடுகிறான்? எதைத் தேடுகிறான்? அதோ! தேடிவந்த பொருள் அகப்பட்டது போல அவன் கண்களின் ஒளி வீசுகிறதே! ஆ! தன்னுடைய அண்ணியைத்தான் மெல்ல எழுப்புகிறான். திடுக்கிட்டு எழுந்திருக்கின்றாள். எதிரே தன் உயிரனைய மைத்துனன் நிற்பதைப் பார்த்து, முதலில், தான் காண்பது கனவோ என எண்ணுகிறாள். தன்னைத் தானே கிள்ளிப் பார்த்துக் கொள்கிறாள். முதன் முதலில் விமலாதித்தனே பேசத் தொடங்குகிறான். தான் தப்பி வந்துவிட்டதாகவும், மறுபடியும் வேங்கை நாட்டை எவ்வாறாவது அடைந்து அதைத் தன் அண்ணனுக்கு முடிசூட்ட முடிவு செய்திருப்பதாகவும், அண்ணனின் இன்ப வாழ்வுதான், தன் வாழ்வு என்றும் கூறி அவளுடைய அடிகளைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொள்கிறான்.

(தொடரும்)

கைத்தறி ஆடைகள்

வணிகக் குறி !

—N. K. M.—

தங்க நாடா

(பதிவு)

எண் 20 முதல் 100 வரையில் வேட்டி, சேலை, துண்டு, போர்வை, மேலாடை முதலியவை பல வகைகளிற் கிடைக்கும்.

நூலாடை கட்டும்
பட்டாடை கட்டும்

நம்பிக்கையான இடம்:

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,

துணி வாணிபம்,

53, கிடங்குத் தெரு, சென்னை 1.

"முல்லைக் கொடி"

குருகுலத்தின் கிழமை இதழ்.

நல்ல தமிழில், புரியும் வகையில்,
உரிய விலையில்,
பலதுறைக் கருத்தில்,
சீர்திருத்த முறையில்,
பணி உருவில்
வெள்ளிக் கிழமைதோறும்
வெளிவரும்
ஒரு பெருந்தன்மையான
உணர்ச்சி வெளியீடு!

ஆண்டுக் கையொப்பம் ரூ. 4
வெளிநாட்டுக்கு ரூ. 5

குறிப்பு:— குருகுலத்தார்க்குக் கட்டணம் இல்லை; தமிழாசிரியர்க்கும், திருவள்ளுவர் கழகங்களுக்கும் ஆண்டுக் கையொப்பம் ரூ 3 மட்டும்.

இதழ் விற்பனையாளர்

எல்லா ஊர்களிலும் தேவை;
ஆறில் ஒன்று கழிவு தரப்பெறும்.
இசைந்த முன்பணத்துடன்
தேவைக்கு எழுதுக!

விளம்பரத் திட்டம்

உள் பக்கம் :

ஒரு பத்தியில் ஓர் அங்குலம் ஒரு தடவைக்கு ரூ. $1\frac{1}{2}$. நீண்ட கால ஒப்பந்தங்களுக்கு ரூ. 1.

கு-பு.—நான்கு அங்குலத்துக்குக் குறையாத விளம்பரமும், ஓர் ஆண்டுக்குக் குறையாத ஒப்பந்தமும் முதன்மையாகக் கவனிக்கப்பெறும்.

மேல் பக்கம் :

முழுப் பக்கம்	ஒரு	தடவைக்கு	ரூ. 30
அரைப் பக்கம்	,,	,,	ரூ. 16
ஒரு பத்தி	,,	,,	ரூ. 12

கு-பு.—தொடர்ந்த விளம்பரங்களுக்கு, கட்டண எளிமை கருதப்பெறும்.

குருகுலம், மாம்பாக்கம்;

(வடதிருச்சிற்றம்பலப் பெருவெளி)

மதுராந்தகம் (அஞ்.)

இது,

திருக்குறள் மறைக்குச்

செய்கை நிலையம்.

நாட்டு மக்கள், 'மொழி' 'கலை' 'தொழில்' 'அருள்' 'பணி' [illegible]னும் ஐவகை வாழ்வியல் [illegible]களிற் சிறந்து திகழ்வதற்கு முயல்வது.

பள்ளி, கல்லூரி, கலையரங்கு, அச்சகம், நூற்பதிப்பு, இதழ்ப் பதிப்பு, படிப்பகம், தொழிலகம், அருள் நிலையம், உணவு விடுதி முதலிய பல்வகை உறுப்புகளுடன் பணி புரிவது.

வாழி, மன்பதை!

குருகுலத்தில்

உணவு விடுதி

- பிள்ளைகள், பண்பிலும் திறமையிலும் இளம்பருவத்திலிருந்தே பழக்கம் பெற, குருகுல வாழ்க்கைதான் சிறந்தது!
- சுவைபொருந்திய நல்வாழ்க்கையைச் சிறு பருவத்திலேயே உருவாக்கிக்கொள்ள, எப்போதும் குருகுலச் சூழலே ஏற்றது.
- மதுராந்தகம் உயர்நிலைப்பள்ளி முதலிய அண்மையிடங்களிற் சென்று கல்வி பயில்வோர், குருகுல விடுதியில் இருக்க விரும்பினால், அவர்க்கும் இடம் அளிக்கப்பெறும்.
- உணவுத் தட்டும் விலையுயர்வும் உள்ள இக் காலத்தில் ஆண்டுக்கு ரூ. 200-க்கு மேற்படாத குறைந்த செலவிலும், விடுதியிற் கலந்துகொள்ள வாய்ப்புண்டு.
- தூய்மையிலும், பணியிலும், ஒருமையிலும் ஆர்வமுடையோர்க்குக் குருகுல இல்லத்தின் வாயில் என்றும் திறந்திருக்கின்றது!

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர் : தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்..)